மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 08ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.02/2023
உள்
அசல் வழக்கு எண்.02/2023
-------------

1. தங்கமாரிமுத்து
2. முத்துமாரி
3. சின்னமுத்துமாரி
4. பூமாரி
5. மாரீஸ்வரி
6. முத்துமாரி
7. பெரியராசா
8. பெரியசாமி ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. சுப்பம்மாள்
2. ராமலட்சுமி
3. முருகலட்சுமி
4. ராமர்
5. மாரிச்சாமி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனு 03.07.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 25.08.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.கணபதிராமன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா வழக்கின் பிராதினை நிராகரித்து (Rejection of Plaint) உத்தரவிடக்கோரி 03.07.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>

வழக்கின் வாதிகள் பிராது சொத்து விபரத்தில் தவறான விஸ்தீரணம் கொடுத்துள்ளார்கள். உண்மையில், தபசில் கண்ட சொத்து சாத்தூர் வட்டம், நென்மேனி உட்கடை வன்னிமடை கிராமம், சர்வே 1407/17ல் ஹெக்டேர் 0.0040.0 ஆகும். மேற்சொன்ன சொத்து விபரப்படி 1ம் மனுதாரரின் தந்தை சுப்பையா பெயருக்கு பட்டா (பட்டா எண்.315) வழங்கப்பட்டு தாவா இடத்தில் அனுபவம் செய்து வந்துள்ளார். 1ம் மனுதாரரின் தந்தை மேற்படி சுப்பையா, வள்ளியம்மாள் என்பவரை திருமணம் செய்திருக்கிறார். மேற்படியார்களின் இல்லற வாழ்க்கையில் 1ம் மனுதாரர் 1, மாரீஸ்வரன் 2, முத்துமாரி 3, சின்னமுத்துமாரி 4, பூமாரி 5, மாரீஸ்வரி 6 ஆகியோர்கள் பிறந்திருக்கிறார்கள். 1ம் மனுதாரர் உடன்பிறந்த சகோதரர் மாரீஸ்வரன் என்பவர் கடந்த 16.11.2007ம் தேதி இறந்துபோய்விட்டார். மேற்படி மாரீஸ்வரனுக்கு மனைவி முத்துமாரி, மகன் பெரிய ராஜா, பெரியசாமி ஆகிய மூன்று பேர்கள் மட்டும் வாரிசுகள் ஆவார்கள். 1ம் மனுதாரர் தகப்பனார் கடந்த 30.04.2008ம் தேதி இறந்துபோய்விட்டார். தாயார் வள்ளியம்மாள் கடந்த 23.01.2016ம் தேதி இறந்துபோய்விட்டார்.

மேற்படி சுப்பையா வள்ளியம்மாள் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து தபசில் கண்ட சொத்தில் 6ல் 5 பங்கு பாகத்தை மனுதாரருக்கு கடந்த 24.09.2020ம் தேதியில் ரூ.19,545/- ரொக்கம் பெற்றுக்கொண்டு ஆவண எண்.5436/2020ன் மூலம் ஒரு கிரையப்பத்திரம் எழுதி கொடுத்து பதிவு செய்திருக்கிறார்கள். எனவே, மனுதாரர் மேற்சொன்ன சொத்து விபரப்படி சொத்தின் முழு உரிமையும் 1ம் மனுதாரருக்கு கிடைத்து 1ம் மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார். 1ம்

மனுதாரர் மேற்சொன்ன சொத்தின் காலியிடத்தில் ஒரு பெட்டி கடை போட்டு வியாபாரம் செய்து வருகிறார். அவ்வாறு 1ம் மனுதாரர் வியாபாரம் செய்து வருவதற்கு நென்மேனி ஊராட்சிக்கு வரிவிதிப்பு எண்.526ன்படி நூலக வரியும் செலுத்தி வருகிறார். 1ம் மனுதாரர் அந்த கடைக்கு 2015-16 தொழில் வரியும் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்திற்கு சாத்தூர் வட்டாட்சியர் அவர்களிடம் பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்து மேற்படி 1ம் மனுதாரர் பெயருக்கு சாத்தூர் வட்டாட்சியர் பட்டா பெயர் மாற்றம் செய்து பட்டா எண்.315 என கடந்த 15.03.2021ம் தேதியன்று உத்தரவு வழங்கியிருக்கிறார்.

தாவா வழக்கு சொத்தில் வாதிகளுக்கு யாதொரு பாத்தியமும் உரிமையும் கிடையாது. வாதிகள் வீணாக 1ம் மனுதாரர் அனுபவத்தை இடைஞ்சல் செய்து வருகிறார். எனவே, வழக்கு சொத்தில் 1ம் மனுதாரர் அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது வகையாட்களோ அல்லது அவர்களது ஏஜெண்டுகளோ எந்த காலத்திலும் இடைஞ்சல் செய்யாதிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் நீதிமன்றத்தில் அ.வ.எண்.57/2021 என வழக்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். மேற்படி அ.வ.எண்.57/2021 வழக்கில் வாதிகள் எதிர்வழக்குரையுடன் கூடிய எதிர்கோருரிமை கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். அதில் விளம்புகை பரிகாரம் மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். அதன்பின்னர் மேற்படி அ.வ.எண்.57/2021 வழக்கனாது 1ம் மனுதாரர் தரப்பு முதல்விசாரணை முடிந்து குறுக்குவிசாரணை செய்வதற்கு வாய்தா ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் கவுண்டர் கிளைமில் சொத்து விபரத்தில் விஸ்தீரணம் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறி சீர்திருத்த மனு தாக்கல் செய்தும், அது இருதரப்பு விசாரணைக்கு பிறகு சீர்திருத்த மனு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

வழக்கின் வாதிகள் தற்போது தாக்கல் செய்துள்ள தாவா வழக்கில் 2 முதல் 8 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக கடந்த 24.09.2020ல் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ள கிரைய ஆவண எண்.5436/2020 இல்லாநிலையது என்று விளம்புகை செய்யக்கோரி தாவா

வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த வழக்கின் வாதிகள் தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கான வழக்குமூலம் அ.வ.எண்.57/2021 வழக்கில் கவுண்டர்கிளைமில் உற்பத்தி ஆகிவிட்டது.

வழக்கின் வாதிகள் பிராதில், மேற்படி அ.வ.எண்.57/2021ஐ 1ம் பிரதிவாதி மட்டும் வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். மேற்படி 24.09.2020ம் தேதிய கிரையப் பத்திரத்தை எழுதிக் கொடுத்த நபர்கள் அனைவரும் மேற்படி அசல் வழக்கில் வாதிகளாக இல்லை என்பதாலும், எதிர்பாத்திய கோரிக்கை வாதிக்கு எதிராக மட்டும் கேட்க முடியும் என்பதாலும், மேற்படி அசல் வழக்கில் எதிர்பாத்திய கோரிக்கையில் பிரதிவாதிகள் பதிவு செய்துள்ள 24.09.2020ம் தேதிய கிரைய பத்திரத்தை இல்லாநிலையது என்று விளம்புகை பரிகாரம் கேட்க இயலாது என்பதால் மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகள் பதிவு செய்துள்ள 24.09.2020ம் தேதிய கிரைய பத்திரத்தை இல்லாநிலையது என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். தாவா வழக்கின் வியாஜ்ஜிய மூலமானது மேற்படி அ.வ.எண்.57/2021 வழக்கிலேயே உற்பத்தியாகிவிட்டது. எனவே, மேற்சொன்ன அ.வ.எண்.57/2021 வழக்கிலேயே வழக்கின் வாதிகள் கட்டளை 2 விதி 3 சிபிசி-ன்படி தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் அனுமதி கோரியிருக்க வேண்டும். அவ்வாறு அ.வ.எண்.57/2021 வழக்கில் முன் அனுமதி கோராமல் தாவா அசல் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் தாவா வழக்கு கட்டளை 2 விதி 2 சிபிசி-ன்படி பாதிப்படைந்துள்ளது. எனவே, தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே, 1ம் மனுதாரரால் தாவா வழக்கின் பிராதினை நிராகரிக்கக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

<u>3). 3ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 2, 4, 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:-</u>

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு உரிமையியல் விசாரணை சட்டம் கட்டளை 7 விதி 2ல் சொல்லப்பட்டுள்ள வகையங்களுக்குள் வராது. ஒரு வழக்கு கட்டளை 2 விதி 2ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்று அனுமானத்தின்பேரில் முடிவு செய்ய இயலாது. அவ்வாறு அசல் வழக்கு கட்டளை 2 விதி 2ன் கீழ்

பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோள் வைக்கப்படும்போது அதுகுறித்து வழக்கின் விசாரணையின் தான் முடிவு செய்ய இயலும். எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல.

உண்மையில் வன்னிமடை கிராமத்தில் உள்ள சர்வே எண்.1407/17ல் கண்ட மொத்த சொத்தில் வடபுற பகுதி எதிர்மனுதாரர்கள்/வாதிகளின் தகப்பனார் மாரிமுத்துவின் பாகத்திற்கு கிடைத்து, அவர் அனுபவம் செய்து வந்துள்ளார். மேற்படி மாரிமுத்து பாகத்திற்கு கிடைத்து அனுபவம் செய்து வந்த வடபுரப்பகுதி வழக்கில் தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி மாரிமுத்து எதிர்மனுதாரர்கள்/வாதிகளை வாரிசாக விட்டுவிட்டு விருப்புறுதி ஆவணம் எழுதி வைக்காமல் 08.03.2007ம் தேதியில் இறந்துவிட்டார். அன்று முதல் தபசில் சொத்தை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள். அதனை மறைத்து 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி 2 முதல் 8 பிரதிவாதிகளிடமிருந்து எதிர்மனுதாரர்களை ஏமாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் 24.09.2020ம் தேதி மோசடியாக ஒரு கிரையப்பத்திரத்தை பதிவு செய்து கொண்டு அதனடிப்படையில் பட்டா பெயர் மாற்றம் செய்து கொண்டு அ.வ.எண்.57/2021 என்ற வழக்கை எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த 2 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பினர்களாக இல்லை. மேற்படி மோசடி கிரையப்பத்திரத்தை இல்லாநிலையது என்று விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டுமானால் 24.09.2020ம் தேதிய கிரையப்பத்திரத்தில் கண்ட அனைத்து நபர்களுக்கு எதிராக மட்டுமே கேட்க இயலும். மேற்கண்ட அ.வ.எண்.57/2021ல் மேற்படி கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்த நபர்களான 2 முதல் 8 மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பினர்களாக இல்லாத காரணத்தால் அவர்களுக்கு எதிராக பரிகாரங்கள் கேட்க இயலாது.

2 முதல் 8 மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு வழக்கு தபசில் சொத்தைப் பொறுத்து எழுதி

பதிவு செய்யப்பட்டுள்ள 24.09.2020ம் தேதிய கிரைய ஆவண எண்.5436/2020 இல்லா நிலையது என்று விளம்புகை பரிகாரம் கேட்டு அ.வ.எண்.02/2023ஐ எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளனர். மேற்படி 24.09.2020ம் தேதிய ஆவணத்தில் கண்ட நபர்கள் அனைவரும் அ.வ.எண்.57/2021ல் வாதிகளாக இல்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் கண்ட கிரையம் பெற்ற நபரான 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி மட்டுமே அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். ஒரு ஆவணத்தை இல்லா நிலையது என்று பரிகாரம் கேட்கும்போது மேற்படி ஆவணத்தில் கண்ட அனைத்து நபர்களும் வழக்கு தரப்பினர்களாக இருக்க வேண்டும். ஆனால் மேற்படி ஆவணத்தை எழுதிக் கொடுத்த 2 முதல் 8 மனுதாரர்கள் அந்த வழக்கில் தரப்பினர்களாக இல்லை. மேலும் எதிர்கோருரிமை வாதிக்கு எதிராக மட்டுமே கேட்க முடியும. 2 முதல் 8 மனுதாரர்கள் மேற்படி அ.வ.எண்.57/2021ல் வாதிகளாகவும் இல்லை. பிரதிவாதிகளாகவும் இல்லை. மேலும் மேற்படி 24.09.2020ம் தேதிய கிரைய ஆவணத்தை இல்லா நிலையது என்று விளம்புகை பரிகாரம் கேட்பற்கான வழக்குமூலம் 1 முதல் 8 மனுதாரர்களுக்கு எதிராகவும் உள்ளது. எனவே, அ.வ.எண்.57/2021ல் எதிர்கோருரிமை கேட்பதற்கான வழக்குமூலம் வேறு, அ.வ.எண்.02/2023ல் உள்ள வழக்குமூலம் வேறு. இரண்டும் வெவ்வேறான வழக்குமூலம் ஆனும். எனவே, கட்டளை 2 விதி 2 இந்த வழக்கிற்கு பொருந்தாது. மேலும், ஒரு வழக்கில் ஒரு குறிப்பிட்ட பரிகாரத்தை கேட்க இயலாது என்கிற சூழ்நிலையில் தனி வழக்கு தாக்கல் செய்யமுடியும். மேலும், உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 2 விதி 2ன் கீழ் ஒரு வழக்கு தடை செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கில் முழு விசாரணை செய்து தான் முடிவுக்கு வரமுடியுமே தவிர சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்யாமல் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு சாட்சி, சான்றாவணங்களை தாக்கல் செய்வதற்கும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளை குறுக்குவிசாரணை செய்வதற்கும் வாய்ப்பு கொடுக்காமல் வழக்கு விசாரணை செய்யாமலே சுருக்குமுறையில் தள்ளுபடி செய்ய முடியாது. எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**7). தீர்வு:-**

**Order VII Rule 11-ல்**

***Rejection of Plaint*** *- The plaint shall be rejected in the following cases:*

*a). Where it does not disclose a cause of action*

*b). Where the relief claimed is undervalued and the plaintiff on being required by the court to correct the valuation within a time to the fixed by the court, fails to do so*

*c). where the relief claimed is properly valued but the plaint is written upon paper insufficiently stamped and the plaintiff on being required by the Court to supply the requistie stamp- paper within a time to be fixed by the Court, fails to do so.*

*d). where the suit appears from the statement in the plaint to the barred by any law*

*[e). where it is not filed in duplicate]*

*[f). where the plaintiff fails to comply with the provisions of Rule 9]*

*[Provided that the time fixed by the Court for the correction of the valuation or supplying of the requisite stamp-papers shall not be extended unless the Court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature from correcting the valuation or supplying the requisite stamp-papers, as the case may be within the time fixed by the Court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff.]*

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**[2006] 0 Supreme (Mad) 68974**

*The Periyar Nagar Christian Association vs. Periyar Nagar CSI Church & Others*

Order II Rule 2 CPC is designed to counteract two evils namely the splitting up of

claim and splitting up of cause of action. For application of the bar, three essential conditions must be satisfied, namely, the earlier suit and the later suit must arise from the same cause of action, the two suits must be between the same parties and that the earlier suit must be decided on merits.

In this case, the appellant base its case on seperate and distinct causes of action. There is no final adjudication in the provious suit, one was dismissed for default and another one was dismissed as no pressed, more over two defendants in the suit were not parties in the earlier suits, hence Order 2 Rule 2 CPC is not applicable in this case *என்றும்*,

**[2010] 0 Supreme (SC) 49050**
*Akila Gupta vs. Narendar Kumar Gupta*

Unless the defendant pleads, the bar under Order 2 Rule 2 of the Code and an issue is framed focusing the parties on that bar to the suit, obviously the court can not examiner or reject a suit on that ground. The pleadings in the earlier suit should be exhibited or marked by consent or at least admitted by both parties. The plaintiff should have an opportunity to explain or demonstrated that the second suit was based on a different cause of action.
*என்றும் மாண்பமை நீதிமன்றங்களின் முன்தீர்ப்புகளில் உள்ளது.*

*இந்த மனுவில் மனுதாரரால் சொல்லப்பட்டுள்ள அ.வ.எண்.57/2021ல் இந்த வழக்கில் உள்ள 1ம் மனுதாரர் மட்டும் வாதியாக உள்ளார். இந்த வழக்கில் உள்ள இதர பிரதிவாதிகளான 2 முதல் 8 பிரதிவாதிகள் அ.வ.எண்.57/2021ல் தரப்பினர்கள் கிடையாது. மேலும், அ.வ.எண்.57/2021 ஆனது முடிவுற்றதாகவும் மனுதாரர் தரப்பில் நிரூபிக்கவில்லை. ஒரு ஆவணத்தை பொறுத்து இல்லா நிலையது என்று பரிகாரம் கோரும்போது அந்த ஆவணத்தில் கண்ட அனைத்து நபர்களும் வழக்கு தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும். ஆனால், இந்த வழக்கில் உள்ள தரப்பினர்கள் அ.வ.எண்.57/2021ல் தரப்பினர்களாக இல்லை. இந்த வழக்கில் வழக்குமூலம் இல்லை என மனு தாக்கல் செய்யவில்லை. வழக்கில் சொல்லியுள்ள வழக்குமூலம் சரியானதா? இல்லையா? என்பதை வழக்கு விசாரணையின்போது மட்டுமே முடிவு செய்ய முடியும். இவ்வழக்கில்*

எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் முன்தீர்ப்புகளும், எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக உள்ளது.

மனுதாரர் மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களில் என்ன காரணத்தினால் இவ்வழக்கு நிராகரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு நிரூபணம் செய்யவில்லை. சிபிசி ஆர்டர் 7 ரூல் 11ல் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக மட்டுமே வழக்கை நிராகரிக்க முடியும். மனுதாரர் எதிர்மனுதாரரின் வழக்கு என்ன காரணங்களினால் நிராகரிக்கப்பட வேண்டுமென பிராதின் அடிப்படையிலோ சட்டத்தின் அடிப்படையிலோ ஆவணங்களின் அடிப்படையிலோ குறிப்பிட்டு கூறி நிரூபணம் செய்யவில்லை.

மேலும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக இல்லை. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக உள்ளது. மனுதாரர்களால் தாவா வழக்கின் பிராதினை நிராகரித்து (Rejection of Plaint) உத்தரவிடக்கோரி 03.07.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் அனுமதிக்க முடியாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மனுதாரர்களால் தாவா வழக்கின் பிராதினை நிராகரித்து (Rejection of Plaint) உத்தரவிடக்கோரி 03.07.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை மற்றும் தரப்பினர்களை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 08ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதார்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.